***கவனிக்க.***–*2020.03.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* II *(அ) மற்றும் பகுதி* IV*(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2169 - 2020 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2020.03.27**

*2169 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 540 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


539-B 82001-405 (2020/ 03)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொட்டாவ, சாமசிரிபுர, இலக்கம் 108/1ஏ, றூஹுணு மாவத்தை, விதானாச்சி தொன் நுவன் சன்ஜய கமகே, (தேசிய அடையாள அட்டை இலக்கம் 810581433V) உரிமையாளர் ஆகிய நான் பன்னிபிட்டிய, இலக்கம் 75/ 10, மாம்புல்கொட, வல்பொலகே சிரிசேன, (தேசிய அடையாள அட்டை இலக்கம் 551092070V) உரிமையாளர் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. ஏ. என். திஸாநாயக்கா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1385 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம் என்னால் இரத்துச்செய்து இல்லாதொழிக்கப்பட்டு வெற்றும் வெறிதுமாக்கப்பட்டுள்ளதென அனைத்து மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வல்பொலகே சிரிசேன.

2019, ஒற்றோபர் 23.

3-910

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கிரிவத்துடுவ, தியகம, இல. 90/ 2ஏ என்னும் முகவரியில் வதியும் திசாநாயக்க லியனகே சரித லங்காநாத்த திசாநாயக்க (தே. அ. அட்டை இல. 852011335V) ஆகிய என்னால் கிரிவத்துடுவ, தியகம, இல. 90/ 2ஏ என்னும் முகவரியில் வதியும் தமுணுபொல அப்புஹாமிலாகே கோசலீ அநுபமா (தே. அ. அட்டை இல. 875770837V) என்பவருக்கு அளிக்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. எச். எம். வீரசிங்க அவர்களினால்2019.01. 26 ஆந் திகதி எழுதி உறுப்படுத்தப்பட்ட 624 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தினை இன்று தொடக்கம் இரத்துச் செய்கின்றேன். இதற்கு பின்னர் அவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

திசாநாயக்க லியனகே சரித லங்காநாத்த திசாநாயக்க.

3-986

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 83, லோட்டஸ் வீதி, தர்கா நகரில் வசிக்கும் மொஹமட் சஹீட் மொஹமட் சுஹைர் ஆகிய நான், களுத்துறை சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. எம். ஆர். ஹைதர் ஹசன் என்பவரினால் 2008, யூன் மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 493 ஆம் இலக்கமுடையதும் இல. 66, லோட்டஸ் வீதி, தர்கா நகரில் வசிக்கும் திருமதி மொஹமட் ரஷீட் சபீனா உம்மா என்பவருக்கு வழங்கப் பட்டதுமான விசேட அற்றோணித் தத்துவமானது, 2020, சனவரி 07 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச்செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

மொஹமட் சஹீட் சுஹைர்.

3-992

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.